மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் வகைப்பாட்டிலே பட்டாக்கள் வழங்குவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. மாவட்ட நிருவாகமே அதை வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, அதுகுறித்த கருத்துரு அரசுக்கு வர வேண்டும் என்பது இல்லை. மாவட்ட நிருவாகமே குழு அமைத்து, பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. Updating survey என்பதற்கும், பட்டா வழங்குவதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால், வகைப்பாடுகளை மாற்றுவதற்கான கருத்துரு அரசுக்கு வர வேண்டியிருக்கிறது. நத்தம் என வகைப்பாடு மாற்றுவதற்கான கருத்துருதான் அரசுக்கு வருகின்றதே தவிர, நத்தமாக இருக்கிற நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தகுதியுள்ள நபர்களுக்கு பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

57—

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை

***12741—திரு. அ. ராமு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜூலை 8]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி அரசு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்பதைக் கற்றுத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, இன்றையதினம் மானியக் கோரிக்கைகள்மீதான விவாதங்களில் விரிவான பதிலுரையை அளிக்கவிருக்கின்ற நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி பகுதியில் பல ஆண்டு காலமாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டு வருகின்றது. அதன்மூலம் பல ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இப்போது தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலையைத் தந்து மிகுந்த சிரமத்திலே இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மீண்டும் அந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையைத் திறந்து விவசாயப் பெருமக்களுடைய குறைகளைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சங்கமானது 807 உறுப்பினர்களுடன் 5–2–1965 அன்று அமைக்கப்பட்டது, இச்சங்க நிருவாகத்தின்கீழ் கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு, 16–12–1966 முதல் தேயிலை உற்பத்தி தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக இயங்கி வந்தது. எனினும், 1998 ஆம் ஆண்டு முதல் கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைச் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்மையால் பசுந்தேயிலை மிகக் குறைந்த அளவே பெறப்பட்டது. ஆண்டொன்றுக்கு தொழிற்சாலையின் தேயிலைத் தூள் உற்பத்தித் திறனான 8 இலட்சம் கிலோவில் 1.39 இலட்சம் கிலோ மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது. தொழிற்சாலையின் முழு உற்பத்தித் திறனை எட்ட இயலவில்லை. மேலும், உற்பத்திச் செலவும் அதிகமான காரணத்தினால், தொடர் நஷ்டம் ஏற்பட்டது. 1–9–2000 ஆம் நாள் முதல் இத்தொழிற்சாலையின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதோடு, 2003 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கமும் கலைக்கப்பட்டது. தொழிற்சாலை கலைப்பு அலுவலரால் சங்கத்தின் சொத்துக்கள் மற்றும் கடன்களைச் சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், 2006 ஆம் ஆண்டு கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவது தொடர்பாக 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டது. தொழிற்சாலையின் கடன் விகிதம் அதிகமாக இருந்த நிலையில், இச்செயற்குறிப்பினை அரசால் ஏற்க இயலவில்லை. கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்தறிய 7 நபர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில், 19–1–2017 அன்று நடைபெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியாக, கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் முன்னாள் உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பசுந்தேயிலை அருகிலுள்ள கட்டபெட்டு தொழிற்சாலைமூலம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், முன்னாள் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பசுந்தேயிலை அளவு மிகக் குறைவாக இருந்தது. தொடர்ந்து, தேயிலையின் வரத்து குறைந்ததன் காரணமாகவும், அச்சங்கத்தினரிடம் பசுந்தேயிலை விநியோகம் செய்யும் ஆர்வம் இல்லாத காரணத்தினாலும், கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை 15 வருடகாலமாக இயங்காத நிலையினாலும், அத்தொழிற்சாலையை தற்போது மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள விவசாயிகளுடைய துயரங்களைத் துடைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கீழ்கோத்தகிரி பகுதியில் வாழ்கின்ற விவசாயிகளுடைய எண்ணத்திற்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மீண்டும் மறுபரிசீலனை செய்து, அந்தத் தொழிற்சாலையை இயக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு விலை கிடைக்காத நேரத்தில், அன்றையதினம் ஆட்சிபுரிந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, ** (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்வதுமாதிரி சொல்ல வேண்டாம். உறுப்பினர் பேசிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அன்றையதினம் சிறு விவசாயிகளுக்காக* New Ooty Tea *என்று ஒரு* tea*–ஐ அறிவித்து, சிறு விவசாயிகள் உற்பத்தி செய்த பசுந்தேயிலையால் உருவாக்கப்பட்ட டீத்தூள்* packet *செய்யப்பட்டு, விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், இப்பொழுது அசாம் மாநிலத்திலிருந்து 60 சதவிகிதம் தேயிலைத் தூளை அதில் கலந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு, நீலகிரி மாவட்ட விவசாயிகளுடைய துயரைத் துடைப்பாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான, கீழ்கோத்தகிரி டீ தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஊட்டி தேயிலைத் தூளானது, நீலகிரி மாவட்டத்தில் விளையும் தேயிலைத் தூள் மற்றும் விலை உயர்ந்த தேயிலைத் தூளுடன் கலந்து, blend *செய்து, நல்ல தரத்துடன் ஊட்டி டீ என்னும் பெயரில் அனைத்து ரேஷன் கடைகளிலும் பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் 2001 ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி* Ootyblended tea*–ல் அசாம் டீ, 10 முதல் 15 விழுக்காடு சேர்க்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், சிறு தேயிலை விவசாயிகளுக்கு அதிகபட்ச விலை வழங்கும் நோக்கில், சிறு தேயிலை 50 முதல் 60 விழுக்காடு ஊட்டி டீ–யில்* blend *செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தேயிலையானது, தரமான, கலப்படமற்ற, சுவையான நல்ல தரத்துடன் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது இத்தேயிலையுடன் அசாம் தேயிலையையும் கலந்து, மேலும் அதிக சுவையுடன் ரேஷன் கார்டுதாரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது நுகர்வோரிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த 2018–2019 ஆம் நிதியாண்டில் 2,699 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேலும், 2011–2012 முதல் 2018–2019 வரையிலான காலத்தில் ஊட்டி தேயிலையின் ஆண்டு சராசரி விற்பனை 3,202 மெட்ரிக் டன் இருந்தது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்

***14612—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—